Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 19 |
| | | Defence |
| | | Court |
| Name | : Dr.எழில் | |
| Father / Husband Name | : நல்லதம்பி | |
| Village | : விருதுநகர் | |
| Taluk | : விருதுநகர் | |
| Caste | : | |
| Calling | : அரசு மருத்துவர் | |
| Religion | : | |
| Age | : 35 | |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.06.2026

**வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற இலவச வழக்கறிஞர் திரு.கணேஷ்பாண்டியன், பதிவு எண் M.S.No.1220/2020 நீதிமன்றத்தில்**

**இருந்தார். வழக்கறிஞர்கள் திரு. P.சந்திரசேகர், பதிவு எண் M.S.No.2049/2016, திரு.R.விக்னேஷ்பாபு, பதிவு எண் M.S.No.1792/2021, திரு.K.ஸ்ரீதரன், பதிவு எண் M.S.No.1868/2025, திரு.B.சதீஸ் குமார், பதிவு எண் M.S.No.8785/2022 மற்றும் செல்வி.கௌசல்யா, பதிவு எண் 6079/2023 ஆகியோர் நீதிமன்றத்தில் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திரு.கணேஷ்பாண்டியன், பதிவு எண் M.S.No.1220/2020 அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2019 அன்று காலை 6.15 மணிக்கு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது அமரர் ஊர்தியில் இறந்த நிலையில் வந்த கனகவள்ளி, வயது 50, க/பெ. பாலசுப்பிரமணியன் என்பவரை பரிசோதித்து அங்க மச்ச அடையாளங்கள் பார்த்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். மேலும் அவரை பிரேத பரிசோதனைக்காக சவக் கிடங்கிற்கு அனுப்பினேன். **இது சம்மந்தமாக நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.08 16:25:53 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 20 |
| | | Defence |
| | | Court |

Name : மருத்துவர் மஞ்சுபார்கவி

Father / Husband Name : A.ரவீந்திரன்

Village : பந்தல்குடி

Taluk : அருப்புக்கோட்டை

Caste :

Calling : அரசு மருத்துவர்

Religion :

Age : 50

(2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.06.2026

**வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற இலவச வழக்கறிஞர் திரு.கணேஷ்பாண்டியன், பதிவு எண் M.S.No.1220/2020 நீதிமன்றத்தில்**

**இருந்தார். வழக்கறிஞர்கள் திரு. P.சந்திரசேகர், பதிவு எண் M.S.No.2049/2016, திரு.R.விக்னேஷ்பாபு, பதிவு எண் M.S.No.1792/2021, திரு.K.ஸ்ரீதரன், பதிவு எண் M.S.No.1868/2025, திரு.B.சதீஸ் குமார், பதிவு எண் M.S.No.8785/2022 மற்றும் செல்வி.கௌசல்யா, பதிவு எண் 6079/2023 ஆகியோர் நீதிமன்றத்தில் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திரு.கணேஷ்பாண்டியன், பதிவு எண் M.S.No.1220/2020 அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2019 அன்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது காலை 11.45 மணியளவில் காவல் ஆய்வாளர் குற்றப்பிரிவு நகர் காவல்நிலையம் அருப்புக்கோட்டை அவர்கள் சுமார் 50 வயது மதிக்கதக்க கனகவள்ளி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து தரக்கோரி கடித எண் 32/19, பிரிவுகள் 302, 380 இதச ன் படி பெண் காவலர் 959 திருமதி.நாகவேல்ஜோதி என்பவரின் மூலம் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை பெற்றேன். நண்பகல் 12.30 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அவருக்கு உடல் விறைப்பு தன்மை, இடது பக்க காலில் முழுமையாகவும் மற்றொரு கால் மற்றும் இரண்டு கைகளில் விறைப்பு தன்மை சற்று குறைவாகவும் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட வெளிக்காயங்கள்

1. வெட்டுக்காயம் – முன்கழுத்தின் நடுப்பகுதியில் நீளவாக்கில் 7x2x2 cm அளவில் இருந்தது.

2. வெட்டுக்காயம் – வலது பக்க நாடியிலிருந்து தாடை முடிவு வரை நீளவாக்கில் 10x2x1 cm அளவில் இருந்தது.

3. வெட்டுக்காயம் – முதல் வெட்டுக்காயத்தின் கீழ் பகுதியில் இரண்டு சிறிதான வெட்டுக்காயங்கள் 1x1x1 cm அளவில் இருந்தது.

4. செங்குத்தான வெட்டுக்காயம் 1x0.5x1 cm அளவில் கழுத்தின் கீழ் பகுதியில் இருந்தது.

அவருக்கு வலது காது மடல் அறுந்து இருந்தது. தலையின் வலது பக்கத்தில் ஒரு வெட்டுக்காயம் 2x1x1 cm அளவில் இருந்தது. அவருக்கு குரல்வளை எலும்பு நல்ல நிலையில் இருந்தது. வலது பக்க முழங்காலில் சிராய்பு காயம் 0.5x0.5x0.5 cm அளவில் இருந்தது.

2. அவரது உள்காயங்களை சோதிக்கும் போது அவருக்கு நுரையீரல், இருதயம், கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் அனைத்தும் வெளிறிய நிறத்தில் இருந்தது. அவருக்கு வயிற்றில் 500 எம்எல் திரவ உணவு இருந்தது. அவருக்கு கர்ப்பப்பை சுருங்கி இருந்தது. கருக்குழாய், சினைப்பை சுருங்கி இருந்தது. கருக்குழாயில் இரண்டு பக்கங்களும் வளையங்கள் காணப்பட்டது. கர்ப்பப்பையின் அடிப்பகுதி மூடியிருந்தது. வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. கருவுற்றதற்கான அறிகுறிகளும் இல்லை. அவருக்கு பிறப்புறுப்பு மற்றும் கருவாயிலிருந்து மாதிரி (Swab) எடுக்கப்பட்டது. அவரது உள் உறுப்புகள் வேதியல் ஆய்வுக்காக இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட Ref.No.P.M.No.6/2019, dt.01.02.2019, அருப்புக்கோட்டை நகர் காவல்நிலைய Cr.No.32/2019 தொடர்பான பரிசோதனை அறிக்கையில் அவருக்கு வயிறு, குடல், சிறுநீரகம், பதப்படுத்தப்பட்ட திரவம் ஆகிய எவற்றிலும் விஷத்தன்மை எதுவும் காணப்படவில்லை. பிறப்புறுப்பிலிருந்த மாதிரியில் விந்தணுக்கள் கண்டறியப்படவில்லை. இரண்டு பக்க Glassslides–லிலும்

விந்தணுக்கள் காணப்படவில்லை. இரத்த மாதிரியை ஊற வைத்து மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

3. இறந்துபோன நபருக்கு கழுத்தில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தினால் நரம்புகளிலிருந்து இரத்தக்கசிவு ஏற்பட்டு Hypovolumia மற்றும் அதிர்ச்சியின் காரணமாக இறந்திருக்கலாம் என சான்று வழங்கினேன். **இது சம்மந்தமாக நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேற்சொன்ன குற்ற வழக்கில் தொடர்புடைய எதிரி ராஜா (எ) சந்தனராஜா என்பவரின் தலைமுடியை சிறிதளவு சேகரித்து கைதி வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு 05.03.2019 அன்று என்னால் அனுப்பி வைக்கப்பட்டது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.08 16:26:06 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 21 |
| | | Defence |
| | | Court |
| Name | : நாகவேல்ஜோதி | |
| Father / Husband Name | : ராஜசேகர் | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : தலைமை காவலர் | |
| Religion | : | |
| Age | : 36 | |

( 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.06.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர போக்குவரத்து

காவல்துறையில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2019 ம் ஆண்டு அருப்புக்கோட்டை நகர காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 01.02.2019 அன்று அருப்புக்கோட்டை நகர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி தபால் மற்றும் கடவுச்சீட்டு பெற்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்த அரசு மருத்துவரிடம் தபாலை ஒப்படைத்து காலை 11.45 மணியளவில் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து அருப்புக்கோட்டை நகர் காவல்நிலைய குற்ற எண் 32/2019 பிரிவு 302, 380 இதச வழக்கில் இறந்துபோன கனகவள்ளி, வயது 50, க/பெ. பாலசுப்பிரமணியன், 4/3, அருப்புக்கோட்டை – விருதுநகர் ரோடு, அருப்புக்கோட்டை என்பவரின் பிரேதத்தை அருப்புக்கோட்டை அரசு மருத்துவருக்கு அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனைக்கு பின் பிரேதத்தை இறந்தவரின் கணவர் பாலசுப்பிரமணியன் என்பவரிடம் நல்ல முறையில் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட இறந்த நபரின் இரத்தக்கறையுடன் கூடிய கிழிந்த நிலையில் ஜாக்கெட் ஒன்று, இரத்தக்கறையுடன் கூடிய பச்சை மற்றும் ஐவரி கலரில் சேலை ஒன்று, இரத்தக்கறையுடன் கூடிய கிழிந்த நிலையில் பிரவுன் கலர் பாவாடை ஒன்று ஆகியவற்றை சேகரித்து காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். 07.02.2019 ம் தேதி கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அருப்புக்கோட்டை அவர்களின் உத்தரவுப்படி பிரேத்திலிருந்து எடுக்கப்பட்ட விஸ்ரா, Swab, மாதிரி ரத்தம் ஆகியவற்றை வட்டார தடய அறிவியல் ஆய்வகம், இராமநாதபுரத்தில் ஒப்படைத்து நிலையம் வந்தேன்.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.08 16:26:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.